கூட்ட எண் 10
2018 - 2019 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 31.10.2018.

2018-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31.10.2018.ந் தேதி புதன் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1. இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செப்டம்பர் 2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர் 2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3. திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி நகராட்சியில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் பொது மக்களின் நலன் கருதி போறகால நடவடிக்கை பணிக்கு தேவையான இயந்திரங்கள், தளவாட சாமான்கள், மற்றும் இதர உபகரணங்கள் வாடகைக்கு பெற்று (பணியாளர்களுடன்) பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 5.00 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம், மேற்படி, செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

4. ஆரணி நகராட்சி கோட்டை மைதானத்தில் 2017 - 2018 ம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் மதிப்பிடு ரூ. 75.00 லட்சத்திலும், ஆரணி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டதின் கீழ் ரூ. 13.50 லட்சம் மதிப்பீட்டிலும் உருவாக்கப்பட்டுள்ள நடைபாதை மற்றும் சுற்றுச் சுவர் திறப்பு விழாவிற்கு 07.02.2018 அன்று வருகை தந்த மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர், மாண்புமிகு இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆகியோர்களை நகராட்சி சார்பாக வரவேற்பு விளம்பரம் மாலை முரசு நாளிதழ் மூலமாக விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கான கட்டணம் ரூ. 12600 /-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

5. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான ஆணையர் அவர்களின் அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் ஈப்பு வாகனம் எண் TN25AX9318 சரவீஸ் செய்ய வேண்யுள்ளதால், அதனை கொள்முதல் செய்த நிறுவனமான ஜெயின் கார்ஸ் நிறுவனத்தில் விட்டு வாகனத்தை சர்வீஸ் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில், வரப் பெற்ற விலைப்புள்ளி செலவினம் ரூ.29431/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம் மேலும், பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி வாகனம் சர்வீஸ் செய்த நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 634 /2016/இ1)

6. இந் நகராட்சியில் உள்ள 33 வார்டுகளிலும் உள்ள பொது மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு சமுதாய குடிநீர் அமைப்புகளை நிறுவி குடிநீர் வழங்க விருப்பம் கோரும் அழைப்பு EXPRESSION OF INTEREST வரப் பெற்று 12.09.2018 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டதில், 12.10.2018 அன்று வரப் பெற்ற EXPRESSION OF INTEREST சமர்ப்பித்த 11 நபர்களின் உறைகள் ஆணையர் அவர்களால் பிரிக்கப்பட்டது. மேலும், வளைத்தளத்தில் சமர்ப்பித்திருந்த ஒரு நிறுவனத்தின் EXPRESSION OF INTEREST 23.10.2018 அன்று பதிவிறக்கம் செய்யப்பட்டது. மேற்படி EXPRESSION OF INTEREST சம்பந்தப்பட்டவர்களின் விவரம் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| SL. No | Details | D.D. Details | Rate to be Remitted to the Municipality for (Rs. As per 20Ltr) | Rate to be Charged for sale of Public (Rs. As per 20Ltr) |
|---|---|---|---|---|
| 1 | Tr. S.Rajan 62C/229 School Street, Arani (3 Palces) Ward No. 1,6,& 30) | Rs. 5000/- KVB DD No. 967347 Dt : 11.10.18 | 0.00 | 8.00 |
| 2 | Mrs, D. Vijayakumari, W/o S.Rajan, 62C/229 School Street, Arani. (Ward No. 30) | DD Not Submitted | 0.00 | 7.00 |
| 3 | Tr. K.Sathishbabu. 33/1 Arugar Koil Street, Sevoor Post, Arani Tk, (for ward 1 & 6 | Rs. 5000/- Andra Bank, DD No. 362812 Dt : 11.10.18 | 0.00 | 8.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | M/s Water Health India Private Ltd, 9-7 Survey No. 308/1 Nagaram, Keesara Mandal, Hydarabad, | Rs. 5000/- Indian Bank DD No. 208809 Dt : 11.10.18 | 0.00 | 10.00 |
| 5 | M/s RRS Infotech, 1/1 DKM Collage Bus Stop. Sainathapuram. Vellore - (ward No. 2.3.5,6,7,8,9,10,11,12) | Rs. 5000/- Oriental Bank of Commerce DD No. 600743 Dt : 11.10.18 | 0.40 | 6.90 |
| 6 | Tr. A.Ahamathkhan, 23, Sabashkhan Street, Chetper Road, Arani (ward No. 20) | Rs. 5000/- SBI DD No. 431914 Dt : 11.10.18 | 0.00 | 7.00 |
| 7 | Mrs. G.Priyadharshini, 179, Gangaiamman Koil Street, Villai Village, Nelal Post, Arani Tk. (ward no. 23) | Rs. 5000/- CUB DD No.026383 & 026384 Dt : 12.10.18 | 0.00<br>0.00 | 7.00<br>7.00 |
| 8 | M/s Dharana Infrasturcture Projects Private Ltd, AP887, J.Block 1st Street, 13th Main Road, Anna Nagar, Chennai - 40 (30 Wards) | Rs. 5000/- KVB DD No. 487975 Dt : 06.10.18 | 1.00 | 6.90 |

அலுவலக குறிப்பு மேற்கண்ட பட்டியலிகளில் உள்ளவர்கள் சமர்ப்பித்துள்ள விருப்பத்துடன் கூடிய விலைப்புள்ளியில் M/s Dharana Infrasturcture Projects Private Ltd, Chennai - 40 நிறுவனம் சமுதாய குடிநீர் அமைப்பை இந்நகரில் உள்ள அனைத்து வார்டுகளிலும் நிறுவி செயல்படுத்திட விருப்பம் கோரும் அழைப்பில் தெரிவித்திருந்த விவரங்களின் விதிமுறைகளுக்குட்பட்டு 20 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை அந்தந்த பகுதி மக்களுக்கு ரூ. 6.90 தொகைக்கு வழங்கவும், ஒவ்வொரு 20லிட்டர் அளவிற்கும் நகராட்சிக்கான ரூ. 1.00 செலுத்தவும், விருப்பம் தெரிவித்து விருப்ப அழைப்பில் இருந்த விலைப் புள்ளியில் தெரிவித்துள்ளதை ஏற்கவும், மேலும், இந்த விருப்பம் கோரும் அழைப்பில் கலந்து கொண்ட நபர்கள் அனைவரையும் விட மேற்கண்ட நிறுவனம் அளித்துள்ள விருப்ப அழைப்பில் சமர்ப்பித்துள்ள விலை விகிதம் குறைவாக உள்ளதால், இதனை ஏற்று மேற்படி நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்க மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 2283/2018/இ1)

7. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான கண்ணப்பன் தெரு நகராட்சி உயர்நிலைப் பள்ளி கூடுதல் வகுப்பறைகள், கணினி அறைகளை அறிவியல் ஆய்வகம், நூலக அலுவலகம், தலைமை ஆசிரியர் அறை மற்றும் இதர கட்டடங்கள் திறப்பு விழாவிற்கு 11.07.2018 அன்று வருகை தந்த மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர், மற்றும் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ஆகியோர்களை நகராட்சி சார்பாக வரவேற்பு விளம்பரம் கீழ்கண்ட தினசரி நாளிதழ்கள் மூலமாக விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கான விளம்பர கட்டணம் ரூ. 37,737 /-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | தினமலர் நாளிதழ் | - 11.07.2018 | - ரூ. 13,860 /- |
| 2. | தினத் தந்தி | - 11.07.2018 | - ரூ. 12,096 /- |
| 3. | தினகரன் | - 11.07.2018 | - ரூ. 11781 /- |
| | மொத்தம் | | ரூ. 37,737 / - |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

8. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட சுப்பிரமணிய சாஸ்திரியார் மேல்நிலைப் பள்ளியில் பாரதப் பிதரமரின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வீடு கட்டும் பணிக்கான பணி உத்தரவு வழங்கும் விழா மற்றும் ஜெயலட்சுமி நகரில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் நுண்ணுயிரி உரம் வழங்கம் விழாவிற்கு வருகை புரிந்த மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருவண்ணாமலை அவர்களின் தலைமையில் நடைபெற்ற விழா குறித்து தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தததற்கான விளம்பர கட்டணம் ரூ. 23,100/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| தினசரி நாளிதழ் | விளம்பரம் செய்த நாள் | தொகை ரூ. |
|---|---|---|
| தினகரன் நாளிதழ் | 07.07.2018 | ரூ. 23,100/- |

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1663/எப்1/2018)

9. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக மதிப்பீடு ரூ.110.00 இலட்சத்தில் ஆரணி நகராட்சிக்கு சொந்தமான ஆரணி நகராட்சியில் வேலப்பாடி எருகிடங்கில் உள்ள குப்பைகளை (Bio Mining) உயிரி சுரங்க முறையில் தரம் பிரித்து அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொள்ள 17.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இரண்டு (Offline) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது தொழில் நுட்ப பரிந்துறைக்குழுவின் பரிசீலனைக்குட்படுத்தப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களில் தொழில்நுட்ப விவரங்கள் அடங்கிய உரையில்

சமர்ப்பிக்கப்பட்ட விவரங்கள் ஒப்பு நோக்கி ஆய்வு செய்ததில், ஒப்பந்த நமுனாவில் குறிப்பிட்டிருந்த தகுதியின் அடிப்படையில் இரண்டு நபருமே தகுதியுடையவராகிறார் என குழுவின் ஒப்பு நோக்கு பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப குழுவின் பரிந்துரையின் பேரில் தொழில் நுட்ப தகுதியின் அடிப்படையில் தேர்ச்சி பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைவிகிதம் அடங்கிய உறையினை 29.10.2018 அன்று மாலை 3.00 மணியளவில் பிரிக்கப்பட்டது. அதன் பேரில் தயாரிக்கப்பட்ட ஒப்பு நோக்கு பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | வழங்கப்பட்ட விலை விகிதம் ரூ. | வழங்கப்பட்ட விலை விகிதம் சதவிகித்தில் |
|---|---|---|---|---|
| 1 | M/s Green Fine Equipments.<br>2/61 Annai Velankanni Nagar,<br>Coimbatore - 641 004 | 110.00 | ரூ. 11655000.00<br>(Including GST 12%) | 9.55% அதிகம் |
| 2 | M/s Shree Bommu Industries,<br>424, 6th Cross Street, Thaneer Panthal,<br>V.K.Road, Peelamedu. Coimbatore - 641 004 | | ரூ. 10989000.00<br>(Including GST 12%) | 3.29% அதிகம் |

அலுவலக குறிப்பு :- வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளி விகித ஒப்பு நோக்கு பட்டியலின் அடிப்படையில் M/s Shree Bommu Industries, V.K.Road, Peelamedu. Coimbatore - 641 004 என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி மதிப்பீட்டு தொகையை விட 3.29% கூடுதலாக உள்ளதை கருத்தில் கொண்டும், இத்திட்டம் அரசின் சிறப்புத் திட்டம் என்பதை கருத்தில் கொண்டு முதல் அழைப்பு என்ற போதிலும், கூடுதல் சதவிகிதத்தில் 5%ற்கு குறைவாக கொடுத்துள்ளதால், ஏற்கலாம். இதனால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும் அனுமதியளிக்கலாம். (கோப்பு எண் 999/இ1/2016)

10. இந் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு 2018-2019 முதல் 2020-2021ம் ஆண்டு வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 23.10.2018 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், பெறப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்களை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஏல விவரம் | உச்ச ஏலத் தொகை கோரியவரின் பெயர் மற்றும் முகவரி | ஏலம் கோரப்பட்ட தொகை ரூ. | சென்ற ஆண்டு ஏலத் தொகை ரூ. (உயர்த்தப்பட்ட வாடகை தொகை) |
|---|---|---|---|---|
| 1 | பெரியார் மாளிகை கடை எண் 5 | R. சிவக்குமார் த/பெ ராமசாமி,<br>11B சின்னசாயக்காரத் தெரு,<br>கொசப்பாளையம், ஆரணி | 14650/- | 14500/- |
| 2 | பழைய மார்கெட் மேல்மாடி கடை எண் 28 | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை | - | - |
| 3 | பழைய மார்கெட் மேலமாடி கடை எண் 7 | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை | - | - |
| 4 | அண்ணாசிலை பின்புறம் உள்ள கடை எண் 10 | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை | - | - |
| 5 | அண்ணாசிலை பின்புறம் உள்ள கடை எண் 11 | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை | - | - |
| 6 | அண்ணாசிலை பின்புறம் உள்ள கடை எண் 15 | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை | - | - |
| 7 | பழைய பேருந்து நிலையம் கடை எண் 11 | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை | - | - |

அலுவலக குறிப்பு :- 1) வரிசை எண் 1க்கு R. சிவக்குமார் என்பவர் 01.04.2017 அன்று உயர்த்தப்பட்ட வாடகையை விட கூடுதலாக ஏலம் கோரியுள்ளார், எனவே, இவரது உச்சக் கேள்வியை ஊர்ஜிதம் செய்யலாம். மேலும், பணி உத்தரவு வழங்கலாம். 2) வரிசை எண்கள் 2,3,4,5,6,7 ஆகிய இனங்களுக்கு ஏலம் கோர தொகை செலுத்தப்பட வில்லை. எனவே, இவ்வினங்களுக்கு மறுஏலம் கோரவும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1827/அ3/2018 )

11. ஆரணி நகராட்சியின் 2017-2018ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித் தணிக்கை நடைபெற்றது. அதற்கான வருவாய் நிதி,குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி ஆகியவைகளின் தணிக்கை அறிக்கைகள் தட்டச்சு (DTP) செய்தது. ஜெராக்ஸ் எடுத்தது மற்றும் பைண்டிங் செய்தமைக்கான செலவினம் ரூ. 25000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம். 2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்காணும் தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 2862/எப்1/2018)

12 ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP)-2018-2019-ன் கீழ் மதிப்பீடு ரூ.100.00 இலட்சத்தில் சாலைப் பணிகள் மேற்கொள்ள 04.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இரண்டு (Offline) மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றுள்ளது தொழில்நுட்ப பரிந்துறைக்குழுவின் பரிசீலனைக்குட்படுத்தப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களில் தொழில்நுட்ப விவரங்கள் அடங்கிய உரையில் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்கள் ஒப்பு நோக்கி ஆய்வு செய்ததில், ஒப்பந்த நமுனாவில் குறிப்பிட்டிருந்த தகுதியின் அடிப்படையில், இரண்டு நபருமே தகுதியுடையவராகிறார் என குழுவின் ஒப்பு நோக்கு பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப குழுவின் பரிந்துரையின் பேரில் தொழில் நுட்ப தகுதியின் அடிப்படையில் தேர்ச்சி பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைவிகிதம் அடங்கிய உறையினை 17.10.2018 அன்று மாலை 3.00 மணியளவில் பிரிக்கப்பட்டது. அதன் பேரில் தயாரிக்கப்பட்ட ஒப்பு நோக்கு பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | வழங்கப்பட்ட விலை விகிதம் ரூ. | வழங்கப்பட்ட விலை விகிதம் சதவிகித்தில் |
|---|---|---|---|---|
| 1 | திரு. M.V. மதி, ஒப்பந்ததாரர்,<br>நெ. 15 நேரு தெரு,<br>ஆற்காடு 632 503 | 100.00 | ரூ. 8763737.00<br>(Including GST 12%) | 0.001% குறைவு |
| 2 | M/s அருணை கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்,<br>நெ.136/52 மாதலங்குல தெரு,<br>திருவண்ணாமலை 606 001 | | ரூ. 9831699.25<br>(Including GST 12%) | 12.19% அதிகம் |

அலுவலக குறிப்பு :- வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளி விகித ஒப்பு நோக்கு பட்டியலின் அடிப்படையில் திரு. M.V. மதி, ஒப்பந்ததாரர், நெ. 15 நேரு தெரு, ஆற்காடு 632 503 ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள விலைப்புள்ளியினை ஏற்கலாம். பணி உத்தரவு வழங்கவும் அனுமதியளிக்கலாம். (கோப்பு எண் 1113/இ1/2018)

13. ஆரணி நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் நிதி 2018-2019ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள **17.10.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம்<br>வருவாய் நிதி | மதிப்பீடு ரு. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| **1** | வெள்ள பாதிப்பு காலங்களில் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகளுக்கான தளவாட பொருட்கள் விநியோகம் செய்தல் மற்றும் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்குதல் | 5.00 | சக்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் திண்டிவனம்<br>இ.இளங்கோவன், ஆரணி | 0.03 % குறைவு<br>0/50 % அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்கண்ட பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம். பணி உத்தரவு வழங்கவும் அனுமதியளிக்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

14. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான TN25V9463 பொது சுகாதார பிரிவு TATA ACE வாகனத்திற்கு பெறப்பட்ட தகுதிக்காண் சான்று காலம் முடிவு பெற்றதால், மேலும், ஓராண்டுற்கு நீட்டிப்பு செய்ய வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் அனுமதி பெற வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை சரி செய்ய வேண்டியுள்ளதால், இயக்குநர், தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, சென்னை -42 அவர்களின் ஆணை பெற்ற பணிமனையில் வாகனத்தை விட்டு சரி செய்ய ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 1.10.000 /-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1 மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும், மேற்படி செலவினத்திற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்படி பணி மேற்கொள்ள தொடர் நடவடிக்கைக்கும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 634/2016/இ1)

15. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான TN25V4633 பொது சுகாதார பிரிவு TATA 407 வாகனத்திற்கு பெறப்பட்ட தகுதிக்காண் சான்று காலம் முடிவு பெற்றதால், மேலும், ஓராண்டுற்கு நீட்டிப்பு செய்ய வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் அனுமதி பெற வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை சரி செய்ய வேண்டியுள்ளதால், இயக்குநர், தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, சென்னை -42 அவர்களின் ஆணை பெற்ற பணிமனையில் வாகனத்தை விட்டு சரி செய்ய ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 1.90.000 /-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1 மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும், மேற்படி செலவினத்திற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்படி பணி மேற்கொள்ள தொடர் நடவடிக்கைக்கும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 634/2016/இ1)

16. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர் மற்றும் ஆசிரியர்களின் நலனை கருத்தில் கொண்டு சுத்தரிக்கப்ட்ட குடிநீர் வழங்கும் இயந்திரம் பொருத்தி குடிநீர் வழங்கும் பொருட்டு, கண்ணப்பன் தெரு நகராட்சி உயர்நிலைப் பள்ளி, பழனி ஆண்டவர் கோயில் நகராட்சி பள்ளி, மருசூரான் தெரு நகராட்சி பள்ளி, பாலாஜி நகர் நகராட்சி பள்ளி, சைதை அனந்தபுரம் நகராட்சி பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு புதியதாக சுத்திகரிக்கப்பட்ட இயந்திரங்கள் பொருத்த ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 5.00 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி பணிகள் மேற்கொள்ள நகராட்சி கல்வி நிதியின் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

17. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான 10 பள்ளிகளில் மாணவ, மாணவியர் மற்றும் ஆசிரியர்கள் நலனை கருத்தில் கொண்டு கடந்த 5ஆண்டுகளுக்கு முன்பு சுத்திகரிக்கப்படட குடிநீர் வழங்கும் இயந்திரங்கள் அமைக்கப்பட்டது. அதில், பெரும்பாலான பள்ளிகளில் சுத்திகரிப்பு இயந்திரங்கள் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளது. அதனை பழுது நீக்கம் செய்து வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தி ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி பணிகள் மேற்கொள்ள நகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

18. ஆரணி நகராட்சி பராமரிப்பில் உள்ள வெங்கட்ராமன் பூங்கா, ஜெயலட்சுமி நகர் பூங்கா, VAK நகர் பூங்கா ஆகிய பூங்காக்களில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சிகளில் சேகரமாகும் குப்பைகளை அந்தந்த பகுதிகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களில் தலா இரண்டு தொட்டிகள் வீதம், மேற்கூறையுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மீதமுள்ள 4 எண்ணிக்கை பூங்காக்களில் இரண்டு தொட்டிகள் வீதம் மேற்கூறையுடன் அமைத்திட ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி பணியினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி.